# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2390/08 - 2024 ජුනි මස 25 වැනි අඟහරුවාදා - 2024.06.25

*2390/08 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**இமதுவ பிரதேச சபை**

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி கட்டளைச் சட்டம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட்டது (267 ஆவது அதிகாரம்) 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில் (1) ஆம் உப பிரிவில் இமதுவ பிரதேச சபை செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2023.10.04 ஆந் திகதிய 150 ஆம் பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட பின்வரும் தீர்மானம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) ஆம் பந்தியுடன் வாசிக்கப்படுகின்ற கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில் (2) ஆம் உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க தென் மாகாண ஆளுநர் விலியம் விஜேசிங்க கமகே ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டதாக இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.*

டாக்டர் **விலியம் விஜேசிங்க கமகே,**
தென் மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
காலி,
*2024, பெப்புருவரி 16.*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மேற்கூறப்பட்ட தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட்டது (267 ஆவது அதிகாரம்) 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில் (1) ஆம் உப பிரிவில் இமதுவ பிரதேச சபை செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க இமதுவ பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் நடாத்திச் செல்லும் மேற்கூறப்பட்ட களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் களியாட்ட நடவடிக்கைக்கு செலுத்தப்பட்ட கட்டணத்திலிருந்து 15% (சதவீதம்) இற்குச் சமமான தொகையை வரியாக விதித்து அறவிடுவதற்கும், இந்தத் தீர்மானம் அரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் செய்யப்பட்டன. என்றாலும் மேல் விதிக்கப்பட்ட களியாட்ட வரி அதன் களியாட்ட செயல்களுக்காக தொடங்கும் திகதிக்கு முன் தொடர்புடைய அமைப்பாளர் அல்லது அமைப்பாளர்கள் அல்லது அவர்கள் சரியான முறையில் இமதுவ பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டன.*

EOG 06 - 0170

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.